1973 மார்ச் 14]

இருக்கிருர்கள். அப்படியென்ருல், 24,800 பேர் வேலேவாய்ப்பின்றி இருப்பார்கள். 1973–74-இல் 6,300 பேருக்கு வேலே கொடுத்தாலும் மேற்கொண்டு 18,500 பேர் மிஞ்சக்கூடிய நிலேயில் இருப்பார்கள். அந்த வகையில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும், வேறுபல இடங்களிலும் நான்காண்டுகள், ஐந்தாண்டுகளாகப் பயிற்சி பெற்றவர்கள் வேலே இல்லாமலிருக்கிருர்கள். அவர்களுக்கு வேலே கிடைக்கச் செய்ய வேண்டிய முயற்சியை எடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டாண்டுகளாகக் கேரளாவில் மாணவர்களேச் சேர்ப்பதை அறவே நிறுத்திவிட்டார்கள். 1970–71-இல் ஆந்திராவில் மாணவர்களேச் சேர்ப்பதை நிறுத்தி விட்டார் கள். பயிற்சி பெற்றவர்கள் இருக்கும்போது அவர்களுக்கு வேலேவாய்ப்பு கொடுத்த பிறகுதான் தேவையை அனுசரித்து அவர்களுக்கு பயிற்சி இடங்களே ஏற்படுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிருேம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் இன்று வேலே இல்லாமல் இருக்கிருர்கள். ஆதலால் அவர்களுடைய வயது வரம்பைச் சற்றுத் தள்ளிப்போட அரசாங்கம் ஆணே பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் ஓரளவு அவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தும் யோசனே அரசுக்கு இருக்கிறது. யார் யாருக்கு அப்படிப்பட்ட நிலேமையோ அவர் களேப்பற்றி மட்டும் கவனிக்கலாம். மொத்தமாக அப்படிப்பட்ட நிலேமை களே ஏற்படுத்தாமல் எங்கே அப்படிப்பட்ட நிலேமைகள் இருக்கின்றனவோ அதைப் பரிசிலிக்கலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலேவரவர்களே, இப்போது ஆசிரியர் களுக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சி பூரணமாக இல்லே என்று சொல்லப் படுகிறது. அதனுல்தான் ஆசிரியர்கள் வேலேநிறுத்தம் போன்ற செயல் களில் ஈடுபடுகிருர்கள். ஆகவே, ஆசிரியர்களின் அந்தமாதிரியான செயல்களேத் தடுக்கின்ற வகையில் அவர்களுக்கு இன்னும் ஒழுங்கு, கட்டுப் பாடு போன்றவைகளே பயிற்சியின்போது போதிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அளிக்கப்படு கின்ற பயிற்சி பூரணமாக இருக்கிறதா இல்லேயா என்று சொல்ல முடியாது. பூரணமாக இருக்க வேண்டும் என்பதுதான் நமது எண்ணம். அதற்கான முயற்சிகளே மேற்கொண்டு வருகிருேம்.

திரு. த. சோணேயா : ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில் நிறையப்பேர் வேலேயில்லாமல் இருப்பதால் பயிற்சிப் பள்ளிகளே தற்காலிகமாக நிறுத்தி யிருப்பதாகச் சொன்னுர்கள். அப்படியானுல் எவ்வளவு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு இன்னும் வேலே கொடுக்கப்படவில்லே ? இன்னும் எத்தனே ஆண்டுகளில் அவர்களுக்கு வேலே கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1968–69-ல் 269 பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவுக்கு 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள். அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டது. 1969–70-ல் 227 பிரிவுகள் இருந்தன. 1970–71-ல் 197 பிரிவுகள் இருந்தன. 1971--72-ல் 162 பிரிவுகள் இருந்தன. சென்ற ஆண்டு முதலாண்டு மாணவர்களே சேர்ப்பதை நிறுத்திவிட்டு, 2-வது ஆண்டு மாணவர்களே வைத்து பயிற்சி

அளிக்கப்பட்டது. அண்டை மாநிலமான கேரளத்தில் முதலிலே ஒரு பிரிவுக்கு 40 மாணவர்களாக இருந்து, அதன்பின் 30 மாணவர்களாக இருந்து, அதற்குப் பின்னால் 20 மாணவர்களாக குறைக்கப்பட்டு, இப்போது அறவே இல்லை என்று ஆக்கியிருக்கிறார்கள். நாமும் அப்படி அறவே மூடிவிட்டாலும் பின்னால் தேவைப்படும்போது பயிற்சி அளிப்பதற்கு சற்று சிரமமாக இருக்கும். அதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். எதற்கும் சிரமமில்லாத ஒரு நிலையைத்தான் கையாள வேண்டும். இந்த ஆண்டில் 6,500 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடித் தந்திருக்கிறோம். இன்னும் பதினாறாயிரத்துச் சில்லரை பேர் வேலை வாய்ப்புப் பெறாமல் இருக்கிறார்கள்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : முந்தைய ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் இருந்தாலும், அவர்களுக்குப் பின்னால் பயிற்சி பெற்றவர்கள் முதலில் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்னதாகப் பயிற்சிப் பெற்றவர்களுக்கு முதலிடம் தரவேண்டும் என்று ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் சில பல காரணங்களால் அதைக் கடைப்பிடிக்க முடியாது என்று சொல்லி, அவர்கள் விருப்பப்படி நியமனம் செய்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளிலும், ஊராட்சிகள், நகராட்சிகள் பள்ளிகளிலும் கூடுமானவரையிலும் அந்த உத்தரவுப்படி நியமனம் செய்கிறார்கள். தனியார் பள்ளிகளும் கூடுமான வரையிலும் அந்த உத்தரவை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

## சென்னை மாநகராட்சி திரைப்பட அரங்குகள் நடத்தல்.

* 359 வினா—திரு கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி தம் சொந்தப் பொறுப்பில் சினிமா தியேட்டர்களைக் கட்டி நடத்த அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : நல்ல வருமானம் வரக்கூடிய ஒரு திட்டமாக இது இருப்பதால், சென்னை மாநகராட்சி தன் சொந்தப் பொறுப்பில் சினிமா தியேட்டர்களைக் கட்டி நடத்த அனுமதி கேட்டால், அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவுக்கு நிதிவசதி இருந்து, மற்ற காரியங்களுக்கு எல்லாம் குறைபாடுகள் எதுவும் இல்லாத அளவுக்கு வசதி படைத்திருந்தால், திரைப்பட அரங்குகளைக் கட்டி நடத்த அனுமதி கேட்டால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம். ஆனால் இப்போது சென்னை மாநகராட்சிக்கு போதுமான நிதிவசதி இல்லை.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சென்னை மாநகராட்சி நிதி நெருக்கடியில் இருப்பதால், பல காரியங்களுக்கு அரசாங்கம் கடனும், மானியமும் வழங்கிவருகிறது. அப்படி இருந்தாலும் சென்னை மாநகராட்சியிடமிருந்து திரைப்பட அரங்குகளை சொந்தப் பொறுப்பில் கட்டி நடத்துவது பற்றிய விண்ணப்பம் ஒன்றும் அரசுக்கு வரவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி கலை அரங்குகள் அமைக்க முன் வந்தால், அரசாங்கம் அதற்கு எந்த வகையில் உதவி செய்யும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. வீராசாமி: சென்னையிலே இருக்கக்கூடிய திரைப்பட அரங்குகளை மாநகராட்சி—அரசாங்கம் பல தொழில்களை தேசியமய மாக்குவதுபோல—எடுத்து நடத்துவதற்கு நம்முடைய அரசை அனுமதி கேட்டால், அரசு அதற்கு அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது கொள்கைப் பிரச்சனை. அதுபற்றி முதலில் அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். அதன் பிறகு யார் யார் எடுத்து நடத்துவது என்பதைப் பார்க்கவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன்: துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்குக் கிடைக்கின்ற கேளிக்கை வரியில் 20 சதவீதத்தை நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தியேட்டர்களைக் கட்டுவதற்குக் கொடுக்கலாம் என்று மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறார். அதன் அடிப்படையில் மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது எல்லாம் நிதிப் பங்கீடுகளை எப்படி செய்வது என்பதற்கான யோசனை. அதைப்பற்றி பின்னால்தான் பரிசிலனை செய்ய வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: இப்பொழுது கிடைக்கின்ற வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் எத்தனை சதவிகிதத்தை அரசாங்கம் ஒதுக்குகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் மூலக் கேள்விக்கு தொடர்புடைய கேள்விகளைக் கேட்கவேண்டும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: சினிமாத் தியேட்டர்களைக் கட்டி நடத்துவதற்கு போதுமான நிதி வசதி வேண்டும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும்